**தலைப்பு 283 - வன பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 283 - வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 30 ஆம் திகதி திணைக்களத்தின் வன பாதுகாப்பு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,046.34 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,032.02 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 41.43 மில்லியன் அதாவது 0.70 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,198.59 | 1,188.99 | 9.60 | 0.80 |
| மூலதனம் | 847.75 | 843.03 | 4.72 | 0.56 |
| மொத்தம் | 2,046,34 | 2,032,02 | 14,32 | 0.70 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 1,180 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பிடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,406.2 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தில் 119 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10:03:07:03 | 80.00 | 87.65 | 7.65 | 9.56 |
| 20:02:01:02 | 1,100.00 | 1,318.52 | 218.52 | 19.87 |
| மொத்தம் | 1,180,00 | 1,406.17 | 226.17 | 19.17 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 72.50 | 63.67 | 58.50 | 65.91 | 274.00 | 215.96 |

### 2.3.2 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0246/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 228.77 மில்லியனாக இருந்தது.

### 2.3.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 6 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 311.65 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0020/000 | 164.12 |
| 6000/0000/00/0002/0103/000 | 0.19 |
| 6000/0000/00/0006/0021/000 | 13.28 |
| 6000/0000/00/0013/0069/000 | 18.17 |
| 6000/0000/00/0015/0138/000 | (3.21) |
| 6000/0000/00/0016/0051/000 | 0.10 |
| | 311.65 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

07 செலவின விடயங்களுக்காக மினையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தாதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 24 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 8,350,620 கூட்டுத்தொகையான 59 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பிட்டைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்புக்கள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20:02:01:02 ஆம் வருமானக் குறியீடு - அரசாங்கக் காடுகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம்

பின்வரும் அவதனிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 1,100 மில்லியன் வருமானமொன்றைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,318.5 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 119.86 சதவீதமாக இருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 2,028 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால வீச்சிற்குரியதாகக் காணப்பட்டது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய உரிமை மூலதனப் பங்குப் பணம் மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய உரிமை மூலதனப் பங்குப் பணம் என்பவற்றுக்கிடையே 7பா 878,986,751 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 10:03:07:03 ஆம் வருமானக் குறியீடு - தனியார் மரங்களின் போக்குவரத்து

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 80 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பிடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 87.7 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 109.63 சதவீதமாக இருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 918,067 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த

நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையிலான கால வீச்சிற்குரியதாகும். நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

28301 ஆம் விடய இலக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,202,251 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 மாதம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகையில் ரூபா 2,149,378 மரணித்த, ஓய்வு பெற்ற மற்றும் ஏனைய அரசாங்க நிறுவகங்களுக்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதிகளாகும்.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2015 நவம்பர் 27 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 2,046.34 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுத் திட்டம் 2015 திசெம்பர் 18 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02.`.2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட

வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

### 3.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 2009 இன் 15 ஆம் இலக்க காடுகள் திருத்த அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட (451 ஆவது அதிகாரம்) காடுகள் கட்டளைச் சட்டத்தின் 64 ஆவது பிரிவின் கீழ் 1979 இன் 05 ஆம் இலக்க காட்டுக் கட்டளை | 409,569 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் மூன்று ஊழியர்களுக்கு ரூபா 409,569 கூட்டுத்தொகையான ஊழியர் படிகள் காடுகள் நிதியத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதியம் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 94 | 5,568,969 | திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி வெளித்தரப்பினர்களுக்கு பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 104 | | சில இழப்பீடுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கை நீண்ட தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

### 3.9 வெளிநாட்டுதவிச் செயற்திட்டம்

மீளாய்வாண்டின்போது திணைக்களத்தால் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் 02 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 747.33 மில்லியனாக இருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூடுபா 170.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுதவிச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் காடழிப்பு மற்றும் காடு அருகிப்போதல் மூலம் ஏற்படும் புகையினால் பசுமை வாயு குறைவடைதல் தொடர்பாக ஐக்கயி நாடுகளின் இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டக் காலத்தில் 86 சதவீதம் முடிவடைந்திருந்த போதிலும், செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 56 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சமூகவன முகாமைத்துவ செயற்திட்டத்திற்குரிய குருநாகலை மாவட்டத்தின் மூன்று வன பயிர்ச் செய்கை பிரதேசங்களை தெரிவான பரீட்சிக்கப்பட்டதுடன் அதில் இரண்டு பயிர்ச் செய்கைகளும் அழிவழ்டைந்து காணப்பட்டன.

**3.10 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தாப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) இலங்கையின் மத்திய மலைநாட்டின் மலை முகடுகளை பாதுகாப்பதற்காக ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 484.3 ஹெக்டேயரில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 377 ஹெக்டேயரில் பராமரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) முதிர்ச்சியடையாத கன்றுகளின் பயிர்ச் செய்கையை பராமரிக்கும் செயற்பாட்டிற்காக ரூபா 93.31 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 3,988.9 ஹெக்டேயரில் செயற்பணிகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்ட அளவு 2,422 ஹெக்டேயர் மாத்திரமாக இருந்தது.

(iii) பைனஸ் வனப்பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தும் வகையில் மாற்றியமைப்பதற்காகவும் பராமரிப்பதற்காகவும் ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் 321 ஹெக்டேயரில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 177.2 ஹெக்டேயர் அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலவாதியான ரூபா 957,222 தொகையான காசோலைகள் காணப்பட்டன. 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையில் அந்தக் காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 நட்டமும் இழப்பும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நட்டம் ரூபா 25,000 இற்கு குறைந்த 33 சம்பங்களின் ரூபா 224,989 தொகையும், நட்டம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 63 சம்பங்களில் ரூபா 11,346,303

தொகையுமான நட்ட இழப்பக்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட நட்டம்∴ இழப்பக்களை உள்ளடக்கிய 68 சம்பங்களில் ரூபா 4,662,938 தொகையான நட்டங்கள் ஏற்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை எடுத்திருந்தது.

**3.13 முகாமைத்துவ நலிவுகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குருநாகலை மாவட்டத்தில் டபள் வாகனமொன்று 2013 சனவரி 05 ஆந் திகதி மற்றும் 2013 நவம்பர் 19 ஆந் திகதிகளில் விபத்துக்களுக்குட்பட்டு முறையே ரூபா 102,424 மற்றும் ரூபா 466,832 தொகையான நட்ட இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. கெப் வண்டியின் சாரதியிடமிருந்து அந்த நட்டத்தில் ரூபா 284,628 தொகை அல்லது 50 சதவீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும் அத் தொகையை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகலை மாவட்டத்தில் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய காணிகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் பயிர்ச் செயகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியின் அளவு 209 ஏக்கராக இனங்காணப்பட்டிருந்தும் அந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 யூன் 08 ஆந் திகதி திவிநெகும மூன்றாவது கட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 152,305 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் நோக்கங்களுக்கு முரணாக குருநாகலை மாவட்ட வன அலுவலகக் கட்டிடத்தில் வாயு சீராக்கலுக்கு அந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) குருநாகலை பாதுகாவலர் உத்தியோகபூர்வ இல்லம் தற்காலிகமாக விமான சேவைகள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்குமாறு 2002 செப்தெம்பர் 09 ஆந் திகதிய பீஎம்∴19∴26∴98 நுவரெலியா ஆம் இலக்க கடிதத்தில் கோரப்பட்டிருந்த போதும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,130,600 குறைவாக வனத் திணைக்களத்தின் நிதியத்தில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நுவரெலியா நீதிமன்றத்திலிருந்து கிடைக்கவேண்டிய நிலுவை வருமானம் ரூபா 36,335 தொகை இருதடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3.14 மனித வள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 63 | 22 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 20 | 22 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,383 | 1,088 | 295 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,609 | 1,293 | 316 |
| | மொத்தம் | 3303,119 | 2,464 | 655 |